
# உ. வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

## தொகுதி – II




பதிப்பாசிரியர்கள்

**முனைவர் க. முருகேசன்**

**முனைவர் சு. குமரன்**

**முனைவர் வ. மகேஸ்வரன்**

# உ.வே. சாமிநாதையரும் பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழறிஞர்களும்

**(பன்னாட்டு ஆய்வுக் கருத்தரங்கம்)**


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | **முனைவர் க. முருகேசன்**<br>**முனைவர் சு. குமரன்**<br>**முனைவர் வ. மகேஸ்வரன்** |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2016 |
| வெளியீடு | : | **தமிழ்த்துறை**<br>**கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி**<br>கோயம்புத்தூர் – 641029. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் – 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்,<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் – 29.<br>அலைபேசி : 98432 73994, 91505 91017 |
| பக்கங்கள் | : | |
| விலை | : | உரூ. 350/- |

**ISBN : 978 - 93 - 85267 - 10 - 9**


# International Conference on U.V. Swaminatha Iyer and Tamil Scholars of the 19th Century


| | | |
|---|---|---|
| Editor's | : | **Dr. K. Murugesan. Dr. S. Kumaran**<br>**Dr. V. Mageshwaran** |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2016 |
| Published | : | **Department of Tamil**<br>**Kongunadu Arts and Science College**<br>Coimbatore - 641 029. |
| Computer | : | **Prdag Print**, Coimbatore - 29. |
| Printing at | : | **Prdag Print**<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 91505 91017 |
| Pages | : | |
| Prize | : | **Rs. 350/-** |

152. **முனைவர் தி. சரவணன்** 716
வள்ளலார் கொள்கைக்குச் சோதிட சாத்திர விதிகள்

153. **பேராசிரியர் செ. யோகராசா** 720
அறியப்படாத ஆய்வுநூல் : திருகோணமலை
தி.த.சரவணமுத்துப் பிள்ளையின் 'தமிழ்ப் பாஷை'

154. **த. கிருஸ்ணவேணி** 726
சுவாமி விபுலாநந்தரின் விஞ்ஞானப் புலமை - ஒரு நோக்கு

155. **றூபி வலன்ரீனா பிரான்சிஸ்** 730
சுவாமி ஞானப்பிரகாசரின் பல்துறை ஆளுமை

156. **அ. ஜெயந்தி** 736
பாரதியின் புனைவுகளில் சூரியன்

157. **வி. ஆண்டனி தமிழரசி** 741
'பாண்டியன் பரிசு காட்டும் அவலச்சுவை'

158. **முனைவர் ஜெ. தேவி** 744
ச. வையாபுரிப்பிள்ளையின் திறனாய்வுக் கலை

159. **முனைவர் கா. பானுமதி** 749
வை. மு. கோபால கிருஷ்ணமாச்சாரியார் உரைத்திறன்

160. **முனைவர் ரா. ராமலட்சுமி** 753
பாம்பன் ஸ்ரீகுமரகுருதாச சுவாமிகளின்
திருத்தொடையலில் முருகப் பெருமானும்
சைவ சித்தாந்தமும்

161. **சு. பாத்திமா** 759
குமாரனாசானின் கவிதைகளில் கருத்தும் கருத்தியலும்

162. **கலாநிதி சின்னத்தம்பி சந்திரசேகரம்** 764
சுவாமி விபுலாநந்தரின் இலக்கிய நோக்கும் அணுகுமுறையும்

163. **Dr. T. Muraleeswari** 770
Hardyan Cosmos

164. **முனைவர் வெ. பாலசரஸ்வதி** 775
வ. வே. சுப்ரமணிய ஐயரின் இலக்கியப் பணி

165. **முனைவர் கோ. ஜெகதீஸ்வரி** 780
பல்துறை வித்தகர் வ.வே.சு ஐயர்

166. **முனைவர் ச.அ. சுஜா** 785
வசனநடை வல்லாளர்

167. **முனைவர் இரா. பொன்னி** 789
பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளை

168. **முனைவர் க. லதா** 793
மறுமலர்ச்சியாளர் மாதவையா

# 168. மறுமலர்ச்சியாளர் மாதவையா



**முனைவர் க. லதா**
இணைப்பேராசிரியர்
தமிழ் உயராய்வு மையம்
பாத்திமா கல்லூரி, மதுரை.

நாவல், சிறுகதை போன்ற புத்திலக்கிய வகைகளைப் படைத்துத் தமிழை வளப்படுத்திய, தமிழுக்கு மறுமலர்ச்சி உண்டாக்கிய முன்னோடிகளுள் ஒருவர்

அ. மாதவையா. அவர் வாழ்ந்த காலகட்டத்துக் காணப்பட்ட சமூகச் சீர்கேடுகளைச் சுட்டிக்காட்டுவதற்கும் அவற்றை நீக்குவதற்கும் தம் எழுத்துக்களைப் பயன்படுத்தியவர். தம் படைப்புக்கள் வழி அ. மாதவையா செய்த புதுமைகளை விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

வீட்டில் பேசும் மொழியாகத் தெலுங்கு இருந்த போதும் மாதவையா, தமிழ் ஆங்கிலம் எனும் இருமொழிகளிலும் புலமை பெற்று விளங்கினார். நாவல், சிறுகதை, நாடகம், இசைப்பாட்டு, கவிதை, சிறுவர்க்கான உரைநடை நூல்கள், மொழிபெயர்ப்பு நாடகம், வரலாற்று நூல்கள், சிறுவர் கதை, செய்யுள், நாடகம், கட்டுரை எனப் பல தளங்களிலும் தம் படைப்புகளைப் பதிவு செய்தவர் அவர். அனைத்துப் படைப்புக்களையும் சமூக விடுதலை, சமுதாய முன்னேற்றம் போன்றவற்றையே முதன்மை நோக்காகக் கொண்டு அவர் படைத்துள்ளார்.

மாதவையா தன்னுடைய இருபதாவது வயதில் எழுதிய நாவல் சாவித்திரி சரித்திரம். இதுவே அவருடைய முதல் நாவல். 1892-இல் விவேக சிந்தாமணி இதழில் தொடராக எழுதினார். சில காரணங்களால் அத்தொடர் நின்றுவிட்டது. அதற்குப்பிறகு எழுதப்பட்டது தான் தமிழ்ப் புதின உலகில் மூன்றாவது நாவல் எனப் பெயர்பெற்ற பத்மாவதி சரித்திரம் (1898) ஆகும். அன்றைய காலகட்டத்தில் அந்தணச் சமூகத்தில் காணப்பட்ட இளமை மணம், பெண்கல்வியின்மை, நகரவாழ்வின் ஆடம்பரம் இளைஞர்களிடையே காணப்பட்ட புதுமையை ஏற்கும் மனத்துணிவு போன்றவற்றை பத்மாவதி சரித்திரத்தில் வலியுறுத்தி எழுதியிருந்தார் மாதவையா. தொடர்ந்து சாவித்திரி சரித்திரத்தைச் சிறிது மாற்றம் செய்து 1903-இல் முத்துமீனாட்சி என்ற பெயரில் வெளியிட்டார் மாதவையா. முத்துமீனாட்சி நாவல் இளமை மணக் கொடுமையால் பாதிக்கப்பட்ட, கணவனை இழந்த முத்துமீனாட்சி என்ற அந்தண சமூகத்துப் பெண் எதிர்கொள்ளும் சிக்கல்களை, அவள் மறுமணம் செய்து கொள்வதை எடுத்துரைக்கும் நாவலாகும்.